# அருப்புக்கோட்டை நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக்கூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவராண்டு 2053 பிலவ வருடம் மாசி மாதம் 17ம் நாள் 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இடம் : அருப்புக்கோட்டை
நாள் : 28.03.2022

நகர்மன்றத் தலைவர்,
அருப்புக்கோட்டைநகராட்சி.

**பொருள் 1 :** ஆணையாளர் அவர்களது மார்ச் 2022 மாதஙகளுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**பொருள் 2 :** நகராட்சி பொறியாளர்(பொ) அவர்களது மார்ச் 2022 மாதஙகளுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**பொருள் 3 :** பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படிக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பதிவு செய்யப்பட்டவை**

| | பிப்ரவரி | மார்ச் |
|---|---|---|
| பிறப்பு | 78 | 62 |
| இறப்பு | 62 | 47 |
| இறந்து பிறந்தவை | 0 | 0 |

**அலுவலகக் குறிப்பு :**

பதிவு செய்யலாம்.

**பொருள்:4** அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 1 முதுல் 36 முடிய உள்ள வார்டுகளில் வசிக்கும் அனைத்து மக்களும் 100 சதவீதம் கழிப்பறைகளை மட்டுமே பயன்படுத்திவருகின்றனர் என்றும் திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்தவில்லை என்றும் அருப்புக்கோட்டை நகராட்சி Open Defecation Free (ODF+) என அறிவிப்பு செய்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது இதனை மேம்படுத்தும் விதமாக அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் தனிநபர் கழிப்பிடம் சமுதாய கழிப்பிடம் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்தவில்லை என்றும் அருப்புக்கோட்டை நகராட்சி சார்பில் நகரினை ODF++ என அறிவிப்பு செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் இப்பொருள் தொடர்பாக தஙகள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் 15 தினஙகளுக்குள் அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு கடிதம் அல்லது மின்னஞ்சல் வாயிலாக (commr.aruppukottai@tn.gov.in) தெரிவித்துள்கொள்ளுமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட பொருள்குறித்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

ஆணையாளரின் முன் அனுமதி வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.959/2022/எச்1

**பொருள்:5** அருப்புக்கோட்டை நகராட்சியில் 2020–2021ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித்தணிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கான தணிக்கைக்கட்டணம் ரூ.1,08,143/– அரசுக்கணக்கில்

செலுத்தப்படவேண்டியுள்ளது. மேற்படி தணிக்கைக்கட்டண நிலுவையினை அரசுக்கணக்கில் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

2020–2021ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைக் கட்டண நிலுவை ரூ.1,08,143/–ஐ அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை நோக்கி நகர்மன்றத்தின் முன் அனுமதியினைப்பெற்று செலுத்தியமைக்கும் மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.874/2005/பி2

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சி சம்பந்தபட்ட ஒப்பந்ததாரர்களுக்கு ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021 வரையிலான மாதத்திற்கு GST (E-TDS) கணினி மூலம் பதிவேற்றம் செய்த வகைக்கு ரூ.12,600/– (பனிரெண்ராயிரத்து அறுநூறு) ஐ திரு.A.சரவணன் GST ஆலோசகருக்கு வழஙக மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழஙகலாம் ந.க.எண்.8057/2021/பி2

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை நகராட்சிபொறியியல் பிரிவு குடிநீர்வாகனம் TN67F9587 ஆனது வாஙகப்பட்டு 15 வருடஙகளுக்கு மேல் ஆகிவிட்டது என்பதாலும் 3 இலட்சம் கிலோமீட்டருக்கு மேல் ஓடிவிட்டதாலும், மேற்படி வண்டியின் ஆயுள் காலம் 13.05.2022 உடன் முடிவடைவதாலும் மேற்படி வாகனத்தை கழிவு செய்யவும் புதிய வாகனம் வாஙகுவதற்கு உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.12,00,000/–க்கும் மன்த்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. இதற்காகும் செலவீனத்தொகையை குடிநீர்வீட்டு இணைப்புகளுக்கு பெறப்படும் வைப்புத்தொகையில் இருந்து பெறப்படும் வட்டித்தொகையில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.00372/2022/இ2

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண் TN67E5405 வாகனத்தில் உள்ள டயர்கள் அனைத்தும் தேய்ந்து பழுது அடைந்து ஒட்ட முடியாத நிலையில் உள்ளது. எனவே 7.50 x 16 என்ற அளவுள்ள 6எண்ணம் டயர்கள் கொள்முதல் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.722/2022/எச்1

**பொருள் 9:** அருப்புக்கோட்டை நகராட்சியின் 2022–2023ம் நிதி ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 2021–2022ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு நகர் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.4764/2019/பி2

**பொருள் 10:** அருப்புக்கோட்டை நகராட்சியில் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மின்னனு சேவை வழஙகல் விதிகள் 2016 விதி 5 துணை விதி (1)ன் மூலம் மின்னனுசேவை விநியோக அமைப்பின் கீழ் இணைதளம் வாயிலாக செயல்படுத்தப்படும் சேவை விவரத்தினை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் தினகரன் நாளிதழில் 21.12.2021 அன்று அறிவிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பு நாளிதழில் வெளியிடப்பட்டதற்கு ரூ.31920/– செலுத்தக்கோரி தினகரன் நாளிதழ் நிறுவனத்திடமிருந்து கேட்பு அறிவிப்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தினகரன் நாளிதழ் நிறுவனத்திற்கு ரூ.31920/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.12277/2021/சி1

**பொருள் 11:** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு புதியதாக வாகனம் வாஙக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் புலன செய்தியில் தெரிவித்துள்ளபடி புதியதாக Innova Crysta வாகனம் வாஙகுவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.35.00 இலட்சத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் செலவுசெய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம்

ந.க.எண்.1600/2022/இ2

**பொருள் 12:** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவின்படி ந.க.எண்.25915/2019/சி1, நாள் 25.01.2022ன்படி உசிலம்பட்டி நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்து வந்த திரு.வீ.பாஸ்கரன் என்பவரை அருப்புக்கோட்டை நகராட்சிக்கு பதவி உயர்வு மூலம் (நிலை 1) பணியிட மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி தனியார் 26.01.2022பிற்பகல் முதல் அருப்புகோட்டை நகராட்சியில் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். உசிலம்பட்டி நகராட்சியிலிருந்து அருப்புக்கோட்டை நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்ததன் பேரில் அன்னாருக்கு பணியிடமாறுதல் பயனப்படி தொகை ரூ.19452/—ஐ வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1629/2022/அ3

**பொருள் 13:** கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021—22 ன் கீழ் வார்டு G, பிளாக் 6, TS.No.32, திருச்சுழி ரோடு தெப்பத்தினை மேம்படுத்தும் பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.84.00 இலட்சத்திற்கு வார்டு G, பிளாக் 6, TS.No.32, திருச்சுழி ரோடு தெப்பத்தினை மேம்படுத்தும் பணிக்கு அரசாணை (நிலை) எண் 15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (NS) துறை நாள் 21.01.2022ம் தேதிய அரசாணையின் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 18.03.2022 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.L.காளியம்மாள், கடலாடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலையைவிட 7.00 சதவீதம் அதிகமாக உள்ளதால் இப்பணிக்கான விலைகுறைப்பு சம்மத கடிதம் (Negotiation) வழஙகுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணஙக 25.03.2022 அன்று ஒப்பந்ததாரரால் வழஙகப்பட்ட விலைக்குறைப்பு கடிதத்தின் படி ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.ஹரிராம் கன்ஸ்டரக்சன் ஈரோடு | 9.00% மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |
| 2. | திரு.L.காளியம்மாள் கடலாடி | 4.99% மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 4.99% அதிகமாக கொடுத்துள்ள திரு.L.காளியம்மாள், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

ந.க.எண். 00577/2022/இ1

**பொருள்14:** அருப்புக்கோட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழுமான்யம் 2021–22ன் (Tied Grant) கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட விருதுநகர் சாலையில் உள்ள உரக்கிடங்கினை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கான (சந்திரா நேஷனல் பள்ளி அருகில்) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் ரூ.7,182/– ஐ Kal Publications PVT. LTD., Madurai நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழஙகலாம் ந.க.எண்.11610/2021/இ1

**பொருள்15:** அருப்புக்கோட்டை நகராட்சி ஆறு பொது சுகாதாரபிரிவின் கீழ் இரண்டாம் நிலை குப்பைசேகரிப்பு வாகனஙகளான கம்பேக்டரில் 51 பெட்டியும், டம்பர்பின் 37 பெட்டிகளும் பயன்படுத்தப்பட்டு குப்பைகள் தரம்பிரிக்கப்பட்டுவருகிறது. அதில் 15 டம்பர்பின் பெட்டிகளும், 25 கம்பேக்டர் பெட்டிகளும் கூக் மற்றும் மூடுகள் இரும்புடயர்கள் உடைந்தநிலையில் பழுதாகி உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுது ஆன பெட்டிகளை பழுதுநீக்கம் செய்ய ஆகும் உத்தேச தோராய செலவின மதிப்பினம் தொகை ரூ.2,00,000/– த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1601/2022/எச்1

**பொருள்16:** அருப்புக்கோட்டை நகரம் வார்டு – D பிளாக்–14, நகரளவு – 6, 5, 28, 29 part எஸ்.பி.கே.மேல்நிலைப்பள்ளி ரோட்டில் எஸ்.பி.கே.39வது பொருட்காட்சி நடத்தக்கூடாது என திரு.M.கண்ணன் என்பவர் எதிர்த்து வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் WP(MD)No.5014/2022ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையாளர் அவர்களை 3ம் பிரதிவாதியாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக திரு.N.திலிப்குமார் அவர்களை ஆஜராகவும் மற்றும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1548/2022/எப்1

**பொருள்17:** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது செயல்முறை உத்தரவு ந.க.எண் 28369/ஜெ3/2018, நாள்.04.12.2018 ன் மூலம் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மயம் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள 324 துாய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 04.12.2018 முதல் 03.12.2021 முடிய மூன்றாண்டு காலத்திற்கு நியமனம் செய்து தனியார் மயம் மூலம் பணிகள் மேற் கொள்ள அனுமதி வழஙகப்பட்டது. அதன்பேரில் இந்நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு 120 துாய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயம் மூலம் நியமனம் செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அனுமதி கால அளவு03.12.2021 அன்று முடிவு பெற்றதால் இந்நகராட்சியில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி 04.12.2021 முதல் 03.03.2021 முடிய மூன்று மாத காலத்திற்கு நகர்மன்ற தீர்மான எண் 1463, நாள்.24.12.2021 மூலம் தற்காலிமாக காலநீட்டிப்புக்கான அனுமதி பெற்று ஏற்கனவே துாய்மை பணி பார்த்து வந்த M.S Malar Clean and Green Pvt Ltd நிறுவனத்திற்கு அதே ஊதியத்தில் துாய்மை பணியினை மேற்கொள்ள உத்தரவு வழஙகப்பட்டது. மேற்படி உத்தரவு வழஙகபட்டதனை ஏற்று பின்னேற்பு வழஙக கோரியும் மற்றும் 04.12.2021 முதல் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு தனியார் மயம் மூலம் துாய்மை பணியினை மேற்கொள்ள காலநீட்டிப்பு வழஙக கோரியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.மேற்படி அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரரணைக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயம் மூலம் துாய்மை பணியினை மேற்கொள்வதற்கான அனுமதி இதுநாள் வரையிலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து

பெறப்படவில்லை. தற்போது அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் அவர்களது தொகுதியில் பொது சுகாதார பணிகள் தொய்வின்றி நடைபெற அமைச்சர் அவர்களின் முகவரியிட்ட கடித கற்றையில் தெரிவித்துள்ளபடி சுகாதார பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார அவசர அவசியம் கருதி 04.03.2022 முதல் 03.06.2022 முடிய மேலும் மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயம் மூலம் அதே ஊதியத்தில் துாய்மை பணிகளை மேற்கொள்ளவும், மேலும் 04.03.2022 முதல் M.S Malar Clean and Green Pvt Ltd நிறுவனம் மூலம் துாய்மை பணியினை மேற்கொண்டு வருவதையும் ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 12.03.2022 ஆம் தேதிய சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் நகர்நல அலுவலல் ஆகியோர்களது அறிக்கையில் தெரிவித்துள்ளதன்படி அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் அவர்களின் தொகுதியில் பொது சுகாதார பணிகள் தொய்வின்றி நடைபெற பொது சுகாதார அவசர அவசியம் கருதி 04.03.2022 முதல் மூன்று மாத காலத்திற்கு அதே ஊதியத்தில் M.S Malar Clean and Green Pvt Ltd நிறுவனத்தின் மூலம் துாய்மை பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11734/2015/எச்1

**பொருள்18:** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு –F, பிளாக் –7, நகரளவு எண்–6/3ல் 1.41 ஏக்கர் (5700ச.மீ.) பரப்பளவில் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் கோரி திருமதி.ஜெயசுந்தரி என்பவர் விண்ணப்பித்ததின் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், விருதுநகர் அவர்களின் ம.வ/ந.ஊ.து.இ(விருமா) எண் 13/2022 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவில் நகராட்சிக்கு காலியிடம் மற்றும் சாலைகளை அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1081/2022 நாள் 15.02.2022ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் வழியாக நகராட்சிக்கு மனுதாரரால் தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி தானமாக பெறப்பட்ட இடத்தினை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அசையா சொத்து பதிவேட்டில் பதிவுசெய்ய அனுமதிக்கலாம்.

ந.க.எண் 209/2022/எப்1

**பொருள்19:** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 36 வரை உள்ள பகுதிகளுக்கு வைகை மற்றும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட குடிநிரினை பாதுகாப்பான முறையில் பொதுமக்களுக்கு வழஙகுவதற்கு குளோரினேற்றம் செய்து கொடுக்கப்படுகிறது. மேற்கண்ட Chlorin Gas Cylinder 2021–2022 வருடத்திற்கான நிதியாண்டிற்கு Chlorin Cylinder விநியோகம் (52 எண்ணம்) செய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தினை குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.1625/2022/இ1

**பொருள்20:** இந்நகராட்சிக்கு சொந்தமான திருமேனிமடத்துத் தெரு கடை எண் 3க்கு மாத வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம் பெற்ற திரு.க.ரத்தினசபாபதி என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக கடையை தொடர்ந்து நடத்த இயலவில்லை எனக்கூறி மேற்படி கடையை நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார். எனவே மேற்படி கடையை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. மேற்படி கடைக்கு குத்தகை உரிமக் காலம் 01.03.2021 முதல் 29.02.2024 முடிய ஆகும். ஆனால் கடையின் உரிமதாரர் கடையை தொடர்ந்து நடத்த இயலவில்லை எனக்கூறி கடையை நகராட்சிவசம் ஒப்படைத்துவிட்டபடியால் அன்னாரது குத்தகை உரிமத்தை ரத்து செய்து அன்னார் 01.03.2021 முதல் 31.03.2022 வரையிலான காலஙகளுக்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகை ரூ.33748/– (வரிகள் உட்பட) அன்னாரது முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டதற்கும் மற்றும் தொடர்ந்து மேற்படி கடைக்கு கேட்பு எழுப்பப்படாமல் இருப்பதற்கு Allotment Cancellation மூலம் குத்தகை உரிமத்தை நீக்கம் செய்தமைக்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.
3. இக்கடை மறுஏலம் விடப்பட்டு அதனால் ஏற்படும் இழப்பிற்கும் இக்குத்தகைதாரரை பொறுப்பாக்கி அசையாசொத்துக்கள் பெயரில் வழக்குத் தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5687/2018/அ1